



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | செப்டம்பர் 28, 2017 | புரட்சி 16 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00


## விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள்

# சங்பரிவாரங்களின் சவாலை முறியடிக்க சூளுரைப்போம்

*விருதுநகர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக ‘விருதுநகர் சுயமரியாதை மாநாடு’ 23.9.2017 அன்று மாலை விருதுநகர் விஸ்வேஸ்வரர் அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது.*

1931ஆம் ஆண்டு விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாட்டின் வரலாற்றை நினைவு கூர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இம்மாநாடு. மாநாட்டையொட்டி விருதுநகர் மாவட்டத்தில் பெரியார் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் வரலாற்றுப் பதிவுகள் பேரறிஞர் அண்ணா சிலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்த வரலாற்றுச் சுவடுகள் கண்காட்சியை திறந்து வைத்தார்.

அங்கிருந்து பறை இசை முழங்க ஊர்வலமாக புறப்பட்டு மாநாட்டு அரங்கிற்கு தோழர்கள் வந்து சேர்ந்தனர். டபிள்யூ.பி.ஏ. சவுந்தரபாண்டியன் நினைவரங்கத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில் வரவேற்புரையாற்றினார். மாவட்ட கழகத் தலைவர் அல்லம்பட்டி நாத்திகபாண்டி முன்னிலை வகித்தார். தோழர்கள் டார்வின்தாசன் (திருச்சி மாவட்ட கழகப் பொறுப்பாளர்), ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), இரா உமாபதி (சென்னை மாவட்ட செயலாளர்), ஈரோடு இரத்தினசாமி (கழக அமைப்புச் செயலாளர்) ஆகியோர் உரையைத் தொடர்ந்து தி.மு.க. கலை இலக்கியப் பேரவையின் தெற்கு மாவட்ட அமைப்பாளர் பா.அசோக் உரையாற்றினார்.

மாநாட்டின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள், சங்கத்தின் தலைவர் ச. தமிழ்ச்செல்வன், 1931இல் விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்களை எடுத்துக் கூறி இன்றைய காலகட்டத்தில் அத் தீர்மானங்களில் வலியுறுத்தப்பட்ட கருத்துகளை செயலாக்குவது குறித்தும் அதற்கான திட்டங்கள் குறித்தும் விரிவாகப் பேசினார். தொடர்ந்து தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணை அமைப்பாளரும், விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்தவருமான தமிழச்சி தங்க பாண்டியன், விருதுநகர் மாவட்டத்தின் சுயமரியாதை வீரர்களை நினைவுகூர்ந்தும் வரலாற்றில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பை விளக்கியும் ஒரு மணிநேரம் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 1931இல் விருதுநகர் மாநாடு நடந்த காலத்தில் நிலவிய சமூகச் சூழலை விளக்கிப் பேசினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி விருதுநகர் சுயமரியாதை மாநாட்டு வரலாற்று நிகழ்வுகளையும் நீட் தேர்வின் ஆபத்துகளையும் விளக்கி, மாநாட்டுத் தீர்மானங்களை முன் மொழிந்தார்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

1931ஆம் ஆண்டு ஆகஸ்டு 8, 9 தேதிகளில் விருதுநகரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாடு மனிதத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் எதிரான மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. அன்றைய காலகட்டத்தில் கடும் எதிர்ப்புகளை சந்தித்தது அத்தீர்மானம். எதிர்ப்புகளுக்கு அஞ்சாது பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மக்கள் மன்றத்தில் எதிர்நீச்சல் போட்டு பரப்பிய கருத்துகளால் தான் தமிழ்நாடு மதவெறிக்கு இடம் அளிக்காத மண்ணாக பக்குவம் பெற்றது. இப்போது பா.ஜ.க., சங் பரிவாரங்கள் ஆட்சி அதிகாரங்கள் வழியாக தமிழ்நாட்டை மதவெறி மண்ணாக மாற்றும் தீவிர முயற்சியில் இறங்கி இருக்கின்றன. சகோதரத்துவத்தை பேணும் மதவெறி அற்ற தமிழ்நாட்டுக்கு சங்பரிவாரங்கள் விடுக்கும் சவாலை




தனித்துவமான தமிழகத்தின் மதச் சார்பற்ற சமூகநீதி கொள்கைகளில் ஊன்றி நிற்கும் அனைத்து கட்சிகள், இயக்கங்கள் மக்களோடு ஒருங்கிணைந்து முறியடிப்போம் என்று இம்மாநாடு 1931இல் பெரியார் முழங்கிய இந்த விருதுநகரில் இருந்து சூளுரைக்கிறது.

**பெண்களுக்கு முக்கிய பங்கு:** பெண்களின் சம உரிமைக்கும், விடுதலைக்கும் குரல் கொடுத்த பெரியார் பொது வாழ்க்கையில் பெண்களின் பங்கேற்பை தொடர்ந்து வலியுறுத்தினார். தமிழ்நாட்டில் பெண்ணுரிமை ஜாதி ஒழிப்பு சமூகநீதி போராட்டக் களம் நோக்கி ஏராளமான பெண்கள் முன்வரத் தொடங்கி விட்டார்கள். இந்த வரலாற்று மாற்றத்தை கருத்தில் கொண்டு பொது வாழ்க்கையில் பெண்களுக்கான ‘சுதந்திர வெளியை’ உருவாக்கித் தருவதற்கு கட்சிகளும் இயக்கங்களும் முன்வர வேண்டிய அவசியத்தை இம்மாநாடு சுட்டிக்காட்டு கிறது அதேபோல் குடும்பங்களிலும் பெண் களுக்கான ஜனநாயக உரிமைகளை மதிக்கும் சுயமரியாதை பண்பாடுகளையும் பேணி வளர்த் தெடுப்போம் என்று இம்மாநாடு உறுதி ஏற்கிறது.

**மூடநம்பிக்கை எதிர்ப்புப் பிரச்சாரம் :** மதவெறியர் களின் துப்பாக்கி குண்டுகளுக்கு குறி வைக்கப்பட்ட தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கௌரிலங்கேஷ் அனைவரும் மதவெறி எதிர்ப்புடன் மூடநம்பிக்கை களுக்கு எதிரான அறிவியலை பரப்பியவர்கள். மதவெறி எதிர்ப்பு பரப்புரையுடன் அறிவியலையும் இணைப்பது தான் மக்களிடத்தில் உறுதியான மதவெறி எதிர்ப்பை உருவாக்கும் என்று மதவெறியர்கள் அஞ்சுகிறார்கள் என்பதையே இந்த படுகொலைகள் உணர்த்துகின்றன. எனவே மதவெறி எதிர்ப்பை அரசியல் கண்ணோட்டத்தோடு நிறுத்தி விடாமல் மூடநம்பிக்கைகளில் இருந்து மக்களை விடுவிக்கும் அறிவியல் மனப்பான்மையை வளர்த் தெடுக்கும் பரப்புரையையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

கழகத் தோழர்கள் கணேசமூர்த்தி, செந்தில் ஆகியோர் முன்னின்று தோழர்களை ஒருங்கிணைத்து கடும் உழைப்பில் இந்த மாநாட்டை நடத்தி முடித்துள்ளனர். நிகழ்வுகளை பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் ஒருங்கிணைத்தார்.

**– நமது செய்தியாளர்**

## சுயமரியாதை வரலாற்றுச் சுவடுகளின் கண்காட்சி



விருதுநகர் மாவட்டத்தில் பெரியார் பங்கேற்ற முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக வரலாற்றுச் சுவடுகள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. விருதுநகர் அண்ணா சிலை சதுக்கத்தில் நிறுவப்பட்டிருந்தது இந்த கண்காட்சி. சுயமரியாதைச் சுடர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களால் 1974ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது இந்த அண்ணா சிலை. சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். விருதுநகரில் பெரியார் பங்கேற்ற நிகழ்வுகளின் பதிவுகளை மா. பாரத் (தி.மு.க. மாணவரணி), அல்லம்பட்டி நாத்திக பாண்டி (மாவட்ட கழகத் தலைவர்) திறந்து வைத்தனர். சாத்தூரில் பெரியார் பங்கேற்ற நிகழ்வுகளின் வரலாற்றுப் பதிவை செல்வம் (தி.மு.க.), அருப்புக்கோட்டை பதிவுகளை இரத்தினசாமி (கழக அமைப்புச் செயலாளர்), கவிஞர் கண்மணி ராசா (தமிழ்நாடு கலைஇலக்கிய பெருமன்றம்), ஃபிரண்ட்ஸ் செராக்ஸ் மோகன் (தி.வி.க. ஆதரவாளர்), சிவகாசி நகரில்பெரியார் நிகழ்வுகளின் பதிவுகளை மா.பா. மணிகண்டன் (மதுரை மாவட்ட கழக செயலாளர்), திருவில்லிபுத்தூர் வரலாற்றில் பதிவுகளை திருப்பூர் கழகத் தோழர்கள் முத்துலட்சுமி, ராஜபாளையம் பதிவுகளை விசுவை குமார் (ஆதித் தமிழர் கட்சி) ஆகியோர் திறந்து வைத்தனர். பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

‘குடிஅரசு’ வெளியிட்ட செய்திகள்

## 1931 – விருதுநகர் சுயமரியாதை மாநாடும் தீர்மானங்களும்

ஈரோட்டில் 1931ஆம் ஆண்டு விருதுநகர் 3ஆவது சுயமரியாதை மாநாடு ஜூன் 8, 9 தேதிகளில் நடந்தது. மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக டபிள்யூ.பி.ஏ. சவுந்திரபாண்டியன் மாநாட்டுக்கு முழு பொறுப்பு ஏற்று நடத்தினார். மாநாட்டுக்கு பொருளாதார மேதையும் சுயமரியாதைக்காரருமான ஆர்.கே. சண்முகம் தலைமை தாங்கினார்.

இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மாநாடும், மூன்றாவது சுயமரியாதை , வாலிபர் மாநாடும் இதே மாநாட்டில் நடந்தன. மாநாடு குறித்து ‘குடிஅரசு’ விரிவாக செய்திகளை பதிவு செய்திருக்கிறது.

ஊர்வலத்தில் 15,000 பேர் பங்கேற்றனர். மாநாட்டில் 5000 பிரதிநிதிகள் பங்கேற்றனர். பெண்கள் மாநாட்டில் 3000 பெண்களும், வாலிபர் மாநாட்டில் 2000 வாலிபர்களும் பங்கேற்றனர். இரண்டு யானைகள் ஊர்வலத்தில் வந்தன. 6 குதிரைகள் பூட்டிய ரதத்தில் தலைவர்கள் ஊர்வலமாக வந்தனர். பெரிய மைதானத்தில் 5 ஏக்கர் சுற்றளவில் அடைப்பு தட்டிகள் போட்டு மாநாட்டு பந்தல் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கடைகளும் கட்டப்பட்டிருந்தன. மாநாட்டு பந்தலில் 200 கம்பங்களில் சுயமரியாதை கொள்கைகள், புராண மரியாதைக் காரர்களின் புரட்டு வாக்கியங்கள், தேசியப் புரட்டு வாக்கியங்கள் பெரிய எழுத்துகளில் அச்சடிக்கப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தன.

மாநாட்டின் நடு மண்டபத்தில் பனகல் அரசர் படம் ஒரு பக்கமும், ஈ.வெ.ராமசாமி படம் இன்னொரு பக்கத்திலும் பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்தன. சுகாதார கண்காட்சி, மருத்துவம் விகிச்சை முறைகளை விளக்கும் கண்காட்சிகள் இடம்பெற்றிருந்தன. 150 அடி நீளத்தில் தனி சமையல் கொட்டகை அமைக்கப்பட்டு, 40 அடுப்புகளில் உணவு தயாரிக்கப்பட்டன. 100 ஆதி திராவிட வாலிபர்கள் இராணுவ உடையுடன் காப்பாளர்களாக செயல்பட்டனர்.

மாநாட்டில் பங்கேற்ற பிரமுர்களின் நீண்ட பட்டியலில் பட்டுக் கோட்டை அழகிரி, எஸ். இராமநாதன், ப. ஜீவானந்தம் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. மாநாட்டுத் தலைவர் ஆர்.கே. சண்முகம், மாநாட்டுக்கு முதல் நாளே வந்தார். ஊர்வலமாக அவர் அழைத்து வரப்பட்டார். விருதுநகர் நகரசபை அவருக்கு வரவேற்புத் தந்தது.

சுயமரியாதை மாநாட்டில் ‘எல்லா மதங்களும் ஒழிய வேண்டும்; மதங்கள் ஒழியாத வரை சகோதரத்துவம் வளராது’ என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

‘மத நடுநிலை’ என்ற பெயரில் மத சீர்திருத்த சட்டங்களைக் கொண்டு வருவதை தடைப்படுத்துவதைக் கண்டித்தும், வர்ணாஸ்ரமக் கொள்கை ஒழிய வேண்டும் என்றும், தீண்டாமை சமுகத்தைப் பிடித்த நோய்; அது ஒழிக்கப்பட வேண்டும் என்றும், இந்தியைத் திணிப்பது வர்ணாஸ்ரமத்தைத் திணிப்பதாகும் என்றும் கதர் தேசியப் பொருளாதாரத் திட்டம், பொருளாதார வளர்ச்சிக்கு தடை என்றும் பெண்களுக்கு சொத்து உரிமை, திருமண உரிமை, விவாகரத்து உரிமை வேண்டும் என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தேவகோட்டையில் ஆதி திராவிடர்கள் மீது நடத்தப்பட்ட ஜாதிவெறி தாக்குதல் குறித்து விசாரணை ஆணையம் நியமிக்கப்பட வேண்டும். மதப் பண்டிகைகளுக்கு அரசு விடுமுறை தரக் கூடாது; தேவைப்பட்டவர்கள் தனியாக விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

பெண்கள் மாநாட்டுக்கு இந்திராணி பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். பெண்களின் கல்வியை 11 வயதிலேயே நிறுத்திவிடாமல் 30 வயது வரை படிக்க வைக்க வேண்டும். ‘பால்ய விவாகத்தை’ தடை செய்யும் ‘சாரதா’ சட்டத்தை உடனே நிறைவேற்றவேண்டும். பெண்களை ஆசிரியர், மருத்துவத்தொழிலுக்கு மட்டும் எடுக்காமல், காவல் துறை, இராணுவத்திலும் வேலைக்கு எடுக்கவேண்டும். ஆண்களைப்போல் சொத்துரிமை வேண்டும். சேர்ந்து வாழ முடியாத கணவர்களிடமிருந்து விவாகரத்து உரிமை வேண்டும். தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும். பள்ளிகளில் சேரும் மாணவர்களிடம் அதற்கான விண்ணப்பங்களில் ஜாதி கேட்பதை நிறுத்த வேண்டும். (அப்போது ஜாதி கேட்கப் பட்டது, ஜாதியப் பாகுபாடு கண்ணோட்டத்தில் – ஆர்.) ஜாதி மற்றும் வர்ணாஸ்ரம அடிப்படையில் நடத்தப்படும் மாணவர் விடுதிகளுக்கு அரசு உதவித் தொகையை நிறுத்த வேண்டும். இரயில் நிலையங்களில் தங்கும் அறைகள் பெண்களுக்காக தனியாக ஒதுக்கவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களை ஆதரித்து நீலாவதி, சிவகாமி, குஞ்சிதம், மரகதவல்லி, நாகம்மாள், ரங்கம்மாள், ஈ.வெ. ராமசாமி பேசினர்.

வாலிபர் மாநாட்டுக்கு வரவேற்புக் குழு தலைவர் எஸ். ஜெயராம், பி.ஏ., அரசியல் விடுதலையைவிட சமுக விடுதலையே அவசியம் என்று அவர் கூறினார். வாலிபர் மாநாட்டுக்கு தலைமை தாங்கியவர் டி.வி. சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்., சமதர்மத்தை வலியுறுத்தி அவர் பேசினார்.

# தடி உயர்த்தித் தட்டிக் கேட்க பெரியார் நிச்சயம் வேண்டும்!

*பால பாரதி (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)*

புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி, தொலைக்காட்சி பேட்டி யில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி பற்றி கூறும்போது அந்த ‘பொம்பள’ய நான் பார்த்ததே இல்லை என்று கூறினார். இதற்கு பதிலளித்து ‘தமிழ் இந்து’ நாளேட்டின் பெண்கள் மலரில் (செப்.17) பாலபாரதி எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள்:

அனிதாவின் மரணத்துக்கு நியாயம் கேட்டு அவரது உயிரைப் பறித்த நீட்டை ரத்து செய்யக்கோரிய மாணவர்களின் போராட்டம் தமிழகமெங்கும் வியாபிக்கத் தொடங்கியது. அதைத் திசை திருப்பும் நோக்கோடு நீட்டை ஆதரித்தும் அனிதாவின் மரணத்தை சிபிஐ விசாரிக்க வேண்டுமெனவும் ஊடகங்கள் வழியாக விவாதங்கள் நிகழ்ந்து கொண் டிருந்தன. அதிலும் குறிப்பாக அனிதா நீட் தேர்வில் தோற்றுவிட்டதால் அவருக்கு மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான தகுதி யில்லையென்றும் நீதிமன்றத்தின் வழியாக அனிதாவின் உரிமையைப் பெற உதவ முன் வந்தவர்கள்தான் அவரது மரணத்துக்குக் காரணமானவர்கள் என்று டாக்டர் கிருஷ்ண சாமி போன்ற தலைவர்கள் பிரச்சாரத்தை நடத்தியதும் பெரும் வேதனையைத் தந்தன.

இதன் பின்னணியில்தான் 2015-ல் தமிழக சட்டமன்றத்தில் நடந்த நிகழ்வொன்றை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தேன். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, டாக்டர் கிருஷ்ண சாமியின் மகளுக்கு மருத்துவ மேற்படிப்புக்கு சீட் வழங்கினார் என்பதை அன்றைய நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சட்ட மன்றத்தில் தெரிவித்திருந்தார். தமக்கென்றால் ஒரு நீதி அனிதாவுக்கென்றால் இன்னொரு நீதியா என்ற எனது கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்ல முடியாதவர், “அந்தப் பொம்பளை யாரென்றே எனக்குத் தெரியாது” என்று ஊடகத்தில் மறுப்பு தெரிவித்தார். “உங்களைப் போன்றே பொதுச்சேவைக்கு வந்த ஒரு பெண்ணை பொம்பளை எனச் சொல்லலாமா ?” என்ற ஊடகத்தாரின் கேள்விக்கு மீண்டும் அவர், “பொம்பளையைப் பொம்பளை என்று சொல்வதிலே என்ன தவறு ? அது அழகான தமிழ் வார்த்தைதானே” என்றார். அதே தூய தமிழ் வார்த்தையைப் பயன்படுத்தி, “அந்தப் பொம்பளையிடம் நான் சீட் வாங்கவில்லை” என ஏனோ அவர் சொல்லவில்லை. அதன் அரசியல் நமக்குப் புரியாமலும் இல்லை.

அந்தக் கேள்வியோடு நிறுத்தாமல், “பிறகு அந்தம்மா பொம்பளை இல்லையா ?” என அடுத்த கேள்வியையும் தொடுத்தார். இதை விடக் கூர்மையான ஆயுதம் வேறு இருந்துவிட முடியாதுதான். நிகழ்ச்சித் தொகுப்பாளர் அசந்தே போனார். இத்தனை நெருக்கத்தில் ஆணாதிக்கத்தின் விஷ அம்பை அவரும் எதிர்கொண்டிருந்திருக்க மாட்டார். ஒரு அரசியல் கட்சியின் முக்கியத் தலைவரிட மிருந்து இப்படியொரு கேள்வியை யாரும் எதிர்பார்க்கவில்லை. போர்க்களத்தில் எனது ஆயுதம் பறிக்கப்பட்டதைப் போன்ற அனுதாபத் தோடும் இரக்கத்தோடும் பலரது பார்வையும் இருந்தது. அதே நேரம் எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.


அனிதாவுக்கு நியாயம் கேட்டுத் தன் ஆசிரியர் பணியைத் துறந்த சபரிமாலாவை அதிமுகவின் பிரமுகர் ஒருவர், “இந்தம்மா வெல்லாம் டீச்சராக வேலை பார்த்தால் விளங்குமா ? வேலையைவிட்டுப் போனதே நல்லது” என்று கொச்சைப்படுத்தினார். போற்ற வேண்டிய போர்க்குணத்தை, வளர்க்க வேண்டிய தியாகக் குணத்தை இத்தனை கேவலமாக இழிவுபடுத்த இவர் யார் என்ற கேள்வியை யாரும் எழுப்பவில்லை.

இந்துத்துவவாதிகளை எதிர்த்துப் பேசினார் என்பதற்காகத் தான் கௌரி லங்கேஷ் மீது ஏழு புல்லட்டுகளை வெறித்தனத்தோடு பாய்ச்சி, உடலைச் சல்லடையாக்கினார்கள் சமூக விரோதிகள். வேறு சிலரோ போதைப்பொருள் கடத்தலில் அவர் ஈடுபட்டதாகக் கூச்சநாச்சமின்றி அவதூறு சொல்லி உயிரற்ற உடலை மேலும் சல்லடையாக்கினார்கள். மதவெறியர், சமூகவிரோதிகளை விட்டுவிட்டு மாணவி வளர்மதியைக் குண்டர் சட்டத்தில் சிறைக்குள் தள்ளிய அரசு பயங்கரவாதம் உள்ளிட்ட பெண் மீதான வன்முறைகள் கூர்மையடைந்தே வருகின்றன.

குடும்பத்தில் மட்டுமல்ல பெண்கள் அரசியலுக்கு வந்தாலும் அங்கேயும் அடக்கமானவர்களாக இருக்க வேண்டும் என்றே உலகம் எதிர்பார்க்கிறது. அடக்க மானவர்கள் எல்லாம் சுடுகாட்டில்தான் இருப்பார்கள். அந்த அடக்கம் தேவையற்றது. டாக்டர் கிருஷ்ணசாமி என் எதிரியல்ல, நாவடக்கம் தேவை என என்னை மட்டுமல்ல ஒட்டுமொத்த பெண்களையும் எச்சரிக்கிறார். **அது அவரது குரல் அல்ல, ‘மனு’வின் குரல்.** ஆகவே, அவரது கருத்தை எதிர்க்கிறேன்.

‘பொம்பளை’ என்றால் பொம்பளை அல்ல. போராட்டம் என்பதே அதன் பொருளாகும் என மாணவிகள் உணர்த்திக் கொண்டிருக் கிறார்கள். எந்தவொரு பெண்ணுக்கு எதிராகவும் எங்கே அநீதி நிகழ்ந்தாலும் சாதி, மதம், அரசியல் வேறுபாடின்றி தடியைச் சுழற்றித் தட்டிக் கேட்பதற்கு ஒரு தந்தை பெரியார் நிச்சயம் வேண்டும்.

## பெரியார் சிலை முன் நடந்த சுயமரியாதை திருமணம்



செப்.17 தந்தை பெரியாரின் 139ஆவது பிறந்தநாள் விழா அன்று கோபி பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலை முன்பு அளுக்குளி சேர்ந்த விஜய சாரதிக்கும் கொளப்பலூர் பகுதியைச் சார்ந்த அபிராமிக்கும், சாதி மறுப்பு மற்றும் சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் வாழ்க்கை துணைநல ஒப்பந்தத்தை வாசிக்க மணமக்கள் இருவரும் அவ்வுறுதி மொழியை ஏற்றுக்கொண்ட பின் மாலை மாற்றிக் கொண்டனர். எளிமையாக நடந்த திருமணத்தை அப்பகுதி பொதுமக்கள் பெருந்திரளாக வியப்புடன் பார்த்தனர். திருமணத்திற்கான ஏற்பாடுகளை அளுக்குளி கிளைக் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

# மேட்டூரில் வாகனப் பேரணி, பெரியார் பிறந்த நாள் விழா எழுச்சி

*பெரியாரின் 139ஆவது பிறந்த நாள் விழா செப்.17 அன்று சேலம் மேற்கு மாவட்டத்தின் சார்பாக மாவட்டம் முழுவதும் கொடியேற்று விழா– இரு சக்கர வாகனப் பேரணி நடைபெற்றது.*

காலையில் சமத்துவபுரத்தில் தோழர்கள் ஒன்று கூடினர். பறை முழக்கம் இசைக்கப்பட்டது. அனிதா, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். மாநில தலைமைக் குழு உறுப்பினர் அ. சக்திவேல் உரைக்குப் பின், மல்லிகுந்தம், ஜீவா நகரில் சந்திரா கழகக் கொடி யேற்றினார். மல்லிகுந்தம் பேருந்து நிலையத்தில் தேன்மொழி கழகக் கொடி ஏற்றினார். சக்திவேல் உரைக்குப் பின் மேச்சேரி பேருந்து நிலையத்தில் அன்புக்கரசி கழகக் கொடியை ஏற்றினார்.

மேச்சேரியிலுள்ள அன்னை தெரசா கருணை இல்லத்திற்கு கோ. தமிழ் இளஞ்செழியன் ரூ.2000 நன்கொடை வழங்கினார். குழந்தைகள் அனைவரும் கழகத்திற்கு நன்றி தெரிவித்தது நெகிழ்ச்சியாக இருந்தது.

கே.ஆர்.வி. ஸ்பின்னிங் மில் பகுதியில் யசோதாவும், பனங்காடு பகுதியில் மாதம்மாளும் கழகக் கொடி ஏற்றினர். நங்கவள்ளி இராஜேந்திரன், 'சுடர் மின்கல பணி மையம்' கடையை மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் திறந்து வைத்தார்.

நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் யசோதா, வீரக்கல்லில் மாதம்மாள், ஆர்.சி. பிளாண்டில் நாகராசன், இராமன் நகரில் அனிதா, சாம் பள்ளியில் கிருத்திகா, ஆர்.எஸ். பகுதியில் சந்தானலட்சுமி, என்.எஸ்.கே. நகரில் இலாவண்யா, டி.கே.ஆர். படிப்பகத்தில் அனிதா, தங்கமாபுரி பட்டணத்தில் அறிவுமதி, காந்தி நகரில் இலாவண்யா, காவேரி கிராஸில் மாதம்மாள், நாட்டாமங்கலத்தில் இலாவண்யா, மாதையன் குட்டையில் கிருத்திகா, ஐ.சி.எச். பகுதியில் சுதா, தூக்கணாம்பட்டியில் காவ்யா, சின்ன பார்க்கில் பிரீத்தி, பெரியார் நகரில் மகேசுவரி, கட்டபொம்மன் நகரில் இரணியா, பாரதி நகரில் இனியா, திலீபன் நகரில் த. குமரப்பா, குமரன் நகரில் அன்பழகன், மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் உக்கம்பருத்திக்காடு செல்வம், பேருந்து நிலையத்தில் தார்காடு விஜயகுமார், அரசு மருத்துவமனை அருகில் அருள், ஒர்க்ஷாப் கார்னரில் குமரேசன், கொளத்தூர் பேருந்து நிலையத்தில் கிருஷ்ணன், மைதானம் பகுதியில் அ. சுரேஷ் குமார், திருவள்ளுவர் நகரில் சீமா, கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில் உக்கம்பருத்திக்காடு கோவிந்தராஜ், மூலக்கடையில் சதீஷ், காந்தி நகரில் பச்சியப்பன், செட்டியூரில் சுந்தரம், காவலாண்டியூரில் சரஸ்வதி, செ.செ.காட்டுவளவில் சின்ராஜ், கண்ணாமூச்சியில் விஜயகுமார் ஆகியோர் கொடியேற்றினர். மேட்டூரில் தோழர்கள் அனைவருக்கும் மாட்டுக்கறி பிரியாணி மதிய உணவாக வழங்கப்பட்டது.

நகரின் மையப் பகுதியில் பதாகைகள் வைக்கப் பட்டிருந்தன. மாவட்டம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 3000 துண்டறிக்கைகள் மக்களிடம் விநியோகிக்கப்பட்டது.

**காவலாண்டியூரில் :** காவலாண்டியூர் கழகத்தின் சார்பில் 17.9.2017 அன்று மாலை 6 மணியளவில் பெரியார் 139ஆவது பிறந்த நாள் விழாவும், கல்வி வள்ளல் காமராசர் 115ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் கண்ணாமூச்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் க. ஈசுவரன் தலைமையேற்றார். க. சித்துசாமி, லோ. சந்தோஷ் (தமிழ்நாடு மாணவர் கழகம்) முன்னிலை வகித்தனர். மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி மற்றும் பறை நிகழ்ச்சியும் 'மாற்றம்' கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். அபிமன்யு நன்றியுரை கூற கூட்டம் முடிவுற்றது.

மேட்டூர் ஆர்.எஸ். பகுதி, காவேரி கிராஸ், கொளத்தூர், கொசகாட்டுவளவு, செட்டியூர், காவலாண்டியூர், குருவரெட்டியூர் தோழர்கள் கலந்து கொண்டனர். கண்ணாமூச்சி காமராசர் மக்கள் மன்றத்தைச் சேர்ந்த அ. முருகேசன் இரவு உணவு ஏற்பாடு செய்தார்.

**மேட்டூர் ஆர்.எஸ். பகுதி :** 18.9.2017 அன்று மேட்டூர் அணை ஆர்.எஸ். பகுதிக்குட்பட்ட தேங்கல்வாரை பகுதியிலுள்ள நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெரியார் 139ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

பள்ளி மாணவர்களுக்கு ஆர்.எஸ். பகுதி தோழர்கள் சுகுமார், சுந்தரமூர்த்தி, பிரகாஷ், நோட்டுகள் பேனாக்கள், இனிப்புகள் வழங்கினர். சுகுமார் பெரியார் பற்றிய அறிமுக உரை நிகழ்த்தினார். பள்ளித் தலைமையாசிரியர் பெரியாரின் பணி குறித்தும், பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்தது பற்றியும் மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார்.

**காவேரி கிராஸ் பகுதியில் :** பெரியாரின் 139ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 21.9.2017 அன்று மேட்டூர் அணை காவேரி கிராஸ் பகுதியிலுள்ள அண்ணா



நகரில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஐ. காளியப்பன் தலைமை வகித்தார். கா. சுந்தரம், க. இரத்தினசாமி முன்னிலை வகித்தனர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி மின்வாரியத் தொழிற்சங்க மாநில துணைச் செயலாளர் ப. பகுத்தறிவன் உரையாற்றினார். இதைத் தொடர்ந்து தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி. வேலுச்சாமி உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். க. இரத்தினசாமி நன்றியுரை யாற்றினார்.

மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறை முழக்கம், பகுத்தறிவு இசை நிகழ்ச்சி மற்றும் 'மாற்றம்' கலைக் குழுவினரின் வீதி நாடகம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மேட்டூர், கொளத்தூர், ஆர்.எஸ்., செட்டியூர், நங்கவள்ளி தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்கள் அனைவருக்கும் மருத்துவர் வீரமணி மாட்டுக்கறி பிரியாணி வழங்கினார்.

**கோவையில் :** *17-09-2017 மாலை 6 மணிக்கு மாவட்ட தலைவர் நேருதாஸ் தலைமையில் பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடந்தது.*



மாவட்ட அமைப்பாளர் ஜெயந்த் வரவேற்புரை நிகழ்த்தினார். அனிதா, கவுரி லங்கேஷ் படத்திறப்பு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. கே.எஸ்.கனகராஜ் (ஜனநாயக இளைஞர் மன்றம்), சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), ச. பால முருகன் (பி.யு.சி.எல்), பிரின்ஸ் கஜேந்திர பாபு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். தொடர் மழையிலும் புதிய தோழர்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர்.

சங்கீதாவின் குழந்தைகள் மற்றும் இசைமதி கிருஷ்ணன் சங்கீதா ஆகியோர் பாடல்கள் பாடினர். கழக பொருளாளர் திருப்பூர் துரைசாமி, முகில்ராசு, இணையதள பொறுப்பாளர் விஜய், கனல்மதி, சூலூர் பன்னீர்செல்வம், விக்னேஷ், லோகு, கணேஷ் கோவை மாநகர தோழர்கள் கலந்து கொண்டனர். நிர்மல் நன்றி கூறினார்.

**'நடிகவேள்' நினைவு நாள் :** இராசிபுரம் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 139ஆவது பிறந்தநாள் விழா - நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு இராசிபுரம் பாரதிதாசன் சாலையில் உள்ள கழக அலுவலகத்தின் முன் நடைபெற்றது. நிகழ்வில், பெரியார் - எம்.ஆர்.ராதா உருவப்படத்திற்கு மாலை அணிவித்து



வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இராசிபுரம் கழக நகர அமைப்பாளர் இரா.பிடல் சேகுவேரா தலைமை தாங்கினார். கழகத் தோழர்கள் சுமதி, மலர், பாலாஜி, இராசிபுரம் நகர வளர்ச்சி மன்றத் தலைவர் வி.பாலு, ம.தி.மு.க நகர செயலாளர் நா.ஜோதிபாசு, தமிழக மக்கள் கட்சி நிறுவனர் நல்வினை. செல்வன், கோல்டன் நற்பணி மன்ற செயலாளர் ஆர்.இளங்கோ, சேகுவேரா நற்பணி இயக்க நிர்வாகிகள் பிரபு, மகேந்திரன், விஜி, கிஷோர் மற்றும் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில செயலாளர் நாணற்காடன், பூபதி, அன்பழகன், கமல்நாத், திலீபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**அந்தியூர் ஒன்றியத்தில்:** ஈரோடு வடக்கு மாவட்ட கழகம் அந்தியூர் ஒன்றியம் சார்பாக



செப்டம்பர் 17ஆம் தேதி காலை கீழ்வானி இந்திரா நகர் பகுதியில் கழகக் கொடியினை மாவட்ட செயலாளர் வேணுகோபால் ஏற்றி வைத்தார். அறிவியல் மன்ற பொறுப்பாளர் சுந்தரம் மற்றும் கிளை கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

**பள்ளி மாணவிக்கு நிதி உதவி:** ஈரோடு வடக்கு மாவட்டம் டி.என். பாளையம் ஒன்றிய கழகத்தின் சார்பில் அப்பகுதி பள்ளி மாணவி ஈஸ்வரிக்கு கல்வி உதவித் தொகை ரூ.10,000/-த்தை மாநில வெளியீட்டு செயலாளர் இராம.இளங்கோவன் தலைமையில் ஒன்றிய பொறுப்பாளர் செயக்குமார் மற்றும் தோழர்கள் வழங்கினார்கள்.

**கடலூரில் :** கடலூர் மாவட்ட கழகம் சார்பாக, மாவட்ட செயலாளர் நட. பாரதிதாசன் தலைமை யில், நட. பாபு அம்பேத்கர் முன்னிலையிலும், தமிழ்நாடு மாணவர் கழகம் மாவட்ட செயலாளர் சேசுரேந்தர், மாவட்ட அமைப்பாளர் பாலமுருகன், மற்றும் சிலம்பு, தினேஷ், மணிகண்டன் ஆகியோரு டன் மிகச் சிறப்பாக பெரியார் பிறந்த நாள் கொண் டாடப்பட்டது. மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பேனா மற்றும் எழுதுபொருட்கள் மற்றும் இனிப்பு கொடுத்து, கழக கொடியேற்றத்துடன் முடிவுற்றது.

**விழுப்புரத்தில் :** பெரியார் 139ஆவது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டம் நயனார் பாளையம் - சங்கராபுரம் பகுதியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்புரையாற்றி



பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. நயனார்பாளையத்தில் க. மதியழகன், ஆ. நாகராசன் ஆகிய இருவரும் மாலை அணிவித்து பெரியார் பற்றிய சிறப்புகளை மக்களிடம் பேசினர். சங்கராபுரத்தில் க.இராமர், சி.சாமிதுரை, மு.நாகராசன், பெரியார் வெங்கட், வீ.வினோத், குமார், கார்மேகம் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டு பேரணி நடத்தி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பெரியாரின் சிறப்பு பற்றி உரையாற்றினர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## நெல்லையில் தேவேந்திர குல வேளாளர் மாநாடு

# “இடஒதுக்கீடு எங்கள் உரிமை: அதை இழக்க முடியாது”




தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி தமிழ் மாநிலக் குழுவின் ஏற்பாட்டில் ‘தேவேந்திர குல வேளாளர் சமூக உரிமைப் பாதுகாப்பு மாநாடு” 24.9.2017 ஞாயிறு மாலை 6 மணியளவில் திருநெல்வேலி வானவில் திருமண மண்டபத்தில் எழுச்சியுடன் நடந்தது. ‘தேவேந்திர குல வேளாளர்’ எஸ்.சி. இடஒதுக்கீடு பட்டியலில் இடம் பெற்றிருப்பது இழிவு என்று பேசி வரும் புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, இடஒதுக்கீட்டால் தேவேந்திர குல வேளாளர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்று கூறி பட்டியலிலிருந்து வெளியேற வேண்டும் என்று பேசி வருகிறார். இதற்கு எதிராக தேவேந்திரகுல வேளாளர்கள் பல ஆயிரக்கணக்கில் திரண்டு, மாநாட்டின் வழியாக டாக்டர் கிருஷ்ணசாமிக்கு கண்டனத்தைத் தெரிவித்ததோடு, இடஒதுக்கீடு போராடிப் பெற்ற உரிமை, அதை இழக்க முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். மாநாட்டுக்கு தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி பொதுச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தியாகி இமானுவேல் பேரவை பொதுச் செயலாளர் பூ. சந்திரபோசு, தீண்டாமை ஒழிப்பு முன்னணி தலைவர் பி.சம்பத், பொதுச் செயலாளர் கே. சாமுவேல்ராஜ், பொறியாளர் ஊர்க்காவலன், நெல்லை மருத்துவக் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் எஸ். ராமகுரு, எம்.எஸ். (ஆர்த்தோ) உள்ளிட்ட பலரும் பேசினர். மாநாட்டு அரங்கம் நிரம்பி வழிந்தது. மண்டபத்துக்கு வெளியே போடப்பட்டிருந்த நாற்காலிகளிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர்களுக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் ‘காணொளி’ காட்சிகள் வழியாக ஒளிபரப்பப்பட்டது. இட ஒதுக்கீட்டின் உரிமைகளால்தான் ஓரளவு தலைநிமிர முடிந்தது என்பதை மாநாட்டுத் தீர்மானம் சுட்டிக் காட்டியது.

1918இல் சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற 14,927 பேரில் பார்ப்பனர்கள் மட்டும் 11,532 பேர்; மீதமுள்ள அனைத்து சாதிகளிலிருந்தும் பட்டம் பெற்றவர்கள் 3395 பேர் மட்டுமே என்று சுட்டிக்காட்டிய தீர்மானம் மத்திய அரசுத் துறைகளில் ‘ஏ’ பிரிவு பதவிகளில் பட்டியல் இனப் பிரிவினர் 11.5 சதவீதம் மட்டுமே இடம் பிடிக்க முடிந்திருப்பதை சுட்டிக் காட்டியுள்ளது. இடஒதுக்கீடு இல்லை என்றால், என்னவாகும் என்பதற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளே சான்று என்பதை தீர்மானம் எடுத்துக் காட்டியது. “2012இல் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மொத்தம் 28 பேர். இதில் பட்டியல் சாதியினர் ஒருவர்கூட இல்லை. உயர்நீதிமன்ற நீதிபதிகள் 1036. இதில் பட்டியல் சாதியினர் 26 பேர் (2.5 சதவீதம்) மட்டுமே. ஏன் உச்சநீதிமன்ற வரலாற்றிலேயே வரதராசன், கே.ஜி.பாலகிருட்டிணன் ஆகிய இருவர் மட்டுமே பட்டியல் ஜாதி யினராக இருந்திருக்கிறார்கள். இட ஒதுக்கீடு இல்லை என்றால் இந்த நிலை தான் அனைத்துத்துறைகளிலும் நீடிக்கும்.

பட்டியலிலிருந்து விலகிக் கொண்டால் உள்ளாட்சித் தேர்தல்களில் சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும், பிரதிநிதித்துவம் பறிபோய்விடும். தமிழ்நாட்டில் 1.5 இலட்சத்துக்கும் மேற்பட்ட பட்டியல் ஜாதி மாணவர்கள் அரசு ஆணை 92இன்படி ஆண்டுக்கு ரூ.70,000 பெற்று, பொறியியல் படித்து வருகிறார்கள். இதில் 25,000 மாணவர்களாவது தேவேந்திரகுல வேளாளர் சமூக மாணவர்களாக இருக்க மாட்டார்களா? இதில் பெரும்பாலோர் கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகள்தானே!

சிறப்பு உட்கூறு திட்டம், தாட்கோ போன்ற திட்டங்களின் மூலம் பட்டியல் ஜாதிப் பிரிவினருக்கு கிடைக்கும் பயன்களை இழந்து விட முடியுமா?” என்றும் தீர்மானம் குறிப்பிடுகிறது.

“தேவேந்திர குல வேளாளர் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராட 1953இல் தியாகி இமானுவேல் சேகரன் ஒடுக்கப்பட்டோர் கழகத்தை தொடங்கினார். 1954இல் அருப்புக்கோட்டை மற்றும் முதுகுளத்தூரில் இரட்டைக் குவளை ஒழிப்பு மாநாடுகளை நடத்தினார். கோயில் திருவிழாக்களில் பட்டியல் இன ஜாதியினர் மீது திணிக்கப்பட்ட தீண்டாமைகளை எதிர்த்துப் போராடினார். 1957இல் ஜாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார். எனவே இழிவு என்று இகழ்ந்தால் இமானுவேல் சேகரன் வழியில் போராடுவோம். சமூக, பொருளாதார, அரசியல் தளத்தில் நமக்கு உரிய பங்கு கிடைக்கும் வரை இடஒதுக்கீட்டு உரிமையை விட்டுத் தர மாட்டோம்” என்று மாநாட்டுத் தீர்மானம் அறிவித்தது.

மாநாட்டில் ஏராளமான மாணவர்கள், வழக்கறிஞர்கள், இளைஞர்கள் திரண்டிருந்தனர்.

**– நமது செய்தியாளர்**

## முதல்வர் திறந்து வைத்த கட்டிடத்திற்கு ‘கணபதி ஹோமம்’ : கழகம் நடவடிக்கை

கோபி வட்டம் நம்பியூர் ஒன்றியம் பட்டிமணியக்காரன் பாளையம் பகுதியில் உள்ள மாதிரி அரசு மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தை, கடந்த மாதம் தமிழக முதல்வர் ஈரோடு வந்த போது, காணொளிக்காட்சி மூலம் திறந்து வைத்தார். திறப்பு விழா நடந்த பிறகும் அப்பள்ளியைத் பயன்பாட்டுக்கு கொண்டு வராமல், கணபதி ஹோமம் நடத்திய பிறகுதான் திறக்கப்படும் என்று அப்பள்ளி தலைமையாசிரியை மங்கையர்க்கரசி அறிவித்துள்ளார். எனவே, முதலைமைச்சர் திறந்து வைத்த பிறகும் கூட, கணபதி ஹோமம் நடத்த முயற்சிக்கும் செயலை தடுத்து நிறுத்தக் கோரி, ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

அப்போதே சம்மந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் அழைத்த ஆட்சியர் இச்செயலை தடுத்து நிறுத்த உத்தரவிட்டுள்ளார். நிகழ்வில், இரத்தினசாமி, இராம. இளங்கோவன், சண்முகப்பிரியன், சிவக்குமார், வேணுகோபால், குமார், சத்தியராசு, சி.என்.சி சிவக்குமார், விஜயசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜையா? நிறுத்தக் கோரி மனு



அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடுவது அரசு ஆணைக்கு எதிரானது என்பதை சுட்டிக்காட்டி ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கழக சார்பில் மனு அளிக்கப்பட்டது. அரசு அலுவலகங்களில் குறிப்பிட்ட மதம் தொடர்பான கடவுளர் படங்கள் இடம் பெறக் கூடாது. குறிப்பிட்ட மதம் தொடர்பான விழாக்கள் கொண்டாடக்கூடாது என்று அரசாணை உள்ளது. ஆனால், அரசாணையை மீறி அரசாணைக்கு முரணாக அனைத்து அரசு அலுவலகங்களிலும் காவல் நிலையங்களிலும் ‘சரஸ்வதி மற்றும் ஆயுத பூஜை விழாக்கள்’ கொண்டாடப்படுகின்றன. இத்தகைய விழாக்களை அனுமதிக்கக் கூடாது என்று மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இரத்தினசாமி (மாநில அமைப்புச் செயலாளர்), இராம. இளங்கோவன் (வெளியீட்டுச்செயலாளர்), ஆசிரியர் சிவக்குமார், சண்முகப்பிரியன் (தெற்கு மாவட்டச் செயலாளர்), வேணுகோபால் (வடக்கு மாவட்டச் செயலாளர்), தோழர்கள் சத்தியராசு, கோபி விஜயசங்கர் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தனர்.

## பெரியார் பெருந்தொண்டர் சோமசுந்தரம் முடிவெய்தினார்

பெரியார் பெருந்தொண்டர் சோமசுந்தரம் (பொள்ளாச்சி) 8.9.2017 முடிவெய்தினார். இவர் நீண்ட காலம் பகுத்தறிவாளர் கழகம், திராவிடர் இயக்கத்தில் பணியாற்றியவர். பொள்ளாச்சி தலைமை அஞ்சலகத்தில் உதவி அஞ்சல் அலுவலராகவும் அஞ்சல் பணியாளர் சங்கத்தில் பொருளாளராகவும் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் வாசகராகவும் ஆதரவாளராகவும் இருந்தவர்.

தோழர் சோமசுந்தரம், அஞ்சல் துறையில் அவருடைய பணிகாலத்தில் பகுத்தறிவாளர்கள் கழகத்தின் சார்பில் பெரியாருக்கு ஒரு பாராட்டு விழாவும் பெரியாரின் உருவப்பட திறப்பு விழாவும் இவருடைய பெரு முயற்சியால் தந்தி அலுவலகத்தில் நடந்தது.

நெருக்கடி நிலை பிரகடனத்தின்போதும் அது அமுலில் இருந்த காலத்திலும் அறிஞர் அண்ணாவின் பாணியில் உடை அணிந்து கொள்வதிலும், ‘விடுதலை’ நாளிதழை அலுவலகத்திற்குக் கொண்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தனது அஞ்சாமையை காட்டியவர். வலுவான திராவிட இயக்கப் பற்றுக் கொண்டவர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th September 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN